16 APR 2009
சட்டமன்றம், சென்னை-5

சுருக்கம்

நில மாற்றம் – தூத்துக்குடி நகராட்சி (தற்போது மாநகராட்சி) ஒட்டப்பிடாரம் வட்டம் – தருவைக்குளம் கிராமம் புல எண். 398–ல் 33.27.5 எக்டேர் நிலம் – அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க நில மாற்றம் செய்து வெளியிடப்பட்ட அரசு ஆணை ரத்து செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6) துறை

அரசாணை (நிலை) எண். 57 நாள்: 03.04.2009

பங்குனி 21,
திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.6.1999.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.21416/2008/டிபி3 நாள் 19.8.2008

****

ஆணை:

தூத்துக்குடி நகராட்சி (தற்போது மாநகராட்சி) ஒட்டப்பிடாரம் வட்டம், தருவைக்குளம் கிராமம் புல எண்.398–ல் தூத்துக்குடி நகராட்சிக்கு (தற்போது மாநகராட்சி) சொந்தமான 33.27.5 எக்டேர் நிலத்தை அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கென மருத்துவக் கல்வித் துறைக்கு முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நில மாற்றம் செய்து ஆணையிடப்பட்டது.

2. தற்போது தூத்துக்குடி, காமராஜர் நகர் அரசு பாலிடெக்னிக் கல்லூரிக்குச் சொந்தமான இடத்தில் அரசு மருத்துவ கல்லூரி அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு முன்நுழைவு அனுமதியும் வழங்கப்பட்டதாக அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் ஆகியோர் தெரிவித்துள்ளதால், தூத்துக்குடி நகராட்சிக்கு (தற்போது மாநகராட்சி) சொந்தமான நிலத்தில் அரசு மருத்துவக் கல்லூரி கட்ட நிலமாற்றம் செய்து அனுமதி அளித்து வெளியிடப்பட்ட முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையை ரத்து செய்து உத்தரவிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ள சூழ்நிலையில், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், தருவைக்குளம் கிராமத்தில் புல எண். 398–ல் தூத்துக்குடி நகராட்சிக்கு (தற்போது மாநகராட்சி) சொந்தமான நிலத்தில் 33.27.5 எக்டேர் நிலத்தை அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கும் பொதுப்பணிக்காக மருத்துவக் கல்லூரிக்கு நிலமாற்றம் செய்ய தூத்துக்குடி நகர்மன்றத்திற்கு அனுமதி அளித்து வெளியிடப்பட்ட 17.6.1999ம்

நாளிடப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.154ஐ ரத்து செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை, சுகாதாரம் (ம) குடும்ப நலம் மற்றும் வருவாய்த் துறைகளின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.2408/ஜே2/09–1 நாள் 17.2.2009 மற்றும் 5760/LD4(1)–2009 நாள் 6.3.2009 ஆகியவைகளில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு ச் செயலாளர்.

பெறுநர்:
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5.
ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி.
இயக்குநர், மருத்துவக் கல்வித் துறை, கீழ்ப்பாக்கம், சென்னை – 10.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி.
நகல்:
மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் துறை, சென்னை – 9.
வருவாய்த் துறை, சென்னை – 9
செயலரின் தனிச் செயலர் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நி.2) துறை. சென்னை –9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்